முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு

# எழும்பூரில் மாபெரும் கேரம் விளையாட்டுப் போட்டி!

## தலைமை: பி.கே.சேகர்பாபு! சொ.வேலு துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜூலை.5

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கேரம் விளையாட்டுப் போட்டி இன்று (5.7.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில் எண்.18, பழைய ஆட்டுத்தொட்டி தெரு, சூளையில் உள்ள டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் கேரம் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் சொ. வேலு விளையாட்டுப் போட்டியினை துவக்கி வைக்கிறார். கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் இ.பரந்தாமன், கே.எஸ். இரவிச்சந்திரன், கழக ஊடகவியல் இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு கலைஞர் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு தி.தயாளன், மு.கமலக்கண்ணன், என்.நந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை கே.ஜான்சன் செய்துள்ளார்.

---

மயிலை கிழக்குப் பகுதி ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - மாபெரும் கேரம் போட்டி!

## மயிலை த.வேலு – எஸ்.முரளி பரிசு வழங்குகின்றனர்! ஜி.என்.புரட்சி செல்வம் தலைமை!

சென்னை,ஜூலை.5-

சென்னை தென்மேற்கு மாவட்டம் - மயிலை கிழக்கு பகுதி ஆதிதிராவிட நலக்குழு சார்பில் பெரியார் அம்பேத்கர் கேரம் மன்றம் நடத்தும் செந்தமிழ் அகரமே! திராவிடச் சிகரமே!! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு இரண்டு நாள் கேரம் போர்டு போட்டி மயிலை கிழக்கு ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி துணை அமைப்பாளர் ஜி.என்.புரட்சிசெல்வம் தலைமையில் இன்று 05.07.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் சாரதாபுரம், மயிலைாப்பூர், சென்னை - 04. நடைபெறுகிறது.

இதில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி ஆகியோர் பரிசு வழங்குகின்றனர்.

124வது அ வட்ட பொறுப்பாளர் மா.பா. அன்பு, மாவட்ட அமைப்பாளர் ஆதிதிராவிட நலக் குழு பூலியூர் டி.மோசஸ் தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.வடிவேல், மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர் என்.அன்பழகன், 124வது வார்டு மாமன்ற உறுப்பினர் விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜி.கே.கௌதம், சே. விவேக்ராஜன் த.ராஜேஷ், முனுசாமி, கே.காளிதாஸ், எம்.மூர்த்தி, ஜி.முருகன்[ஏ] அப்பு, டி.கார்த்திக், என். சி.நிர்மல்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மு.தம்பிதுரை, சி.தசரதன், நந்னதம் நம்பிராஜன், எஸ்.மோகன், டாக்டர் கலை, கதிரவன் டாக்டர் ஜெ.அருண், சு. வில்லவன், வேலுசம்பந்தம், மந்தைவெளி அ.பாபு, செல்வி சௌந்தரராஜன் யோகேஷ்ரவி, எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ. ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கார் ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, கோடம்பாக்கம் மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன்

மயிலை கிழ்ககு பகுதி நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, சீமென் கோ.சேகர், பி.எல். தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார்

மயிலை கிழக் கு பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ். அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி

மயிலை கிழ்ககு பகுதி மாமான்ற உறுப்பினர்கள் அ.ரேவதி MC, கீதாமுரளிMC உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி
### ஜூலை 5 (2000)



சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு “மாநில சிறந்த கூட்டுறவாளர்” விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பார்வதி நாராயணசாமி
### ஜூலை 5 (2023)



தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்றத் தொடங்கியவர்.

வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழக வளரப் பாடுபட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

த.வெ.க, அரசுக்கு எதிராக

கடற்கரையில்

## திதி கொடுத்து விவசாயிகள் நூதன போராட்டம்!



நாகை,ஜூலை.5-

நாகை கடற்கரையில் தவெக அரசுக்கு எதிராக விவசாயிகள் திதி கொடுத்து நூதன போராட்டம் நடத்தினர். தமிழக விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என்று தவெக தலைவர் விஜய் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்திருந்தார். தேர்தல் முடிந்து விஜய் முதல்வராக பொறுப்பேற்று விட்டார். ஆனால் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ரூ.75,000 வரை பெற்ற பயிர்கடன் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் அதிருப்தியடைந்த விவசாயிகள் டெல்டா மட்டுமின்றி தமிழகம் முழுவதும் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக பயிர் கடன் முழுமையாக ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு இறந்து விட்டது என்று கூறி நாகை புதிய கடற்கரையில் தமிழக காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில் திதி கொடுக்கும் நூதன போராட்டம் இன்று காலை நடந்தது.மாநில கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் விஜயராஜ், மாவட்ட செயலாளர் சக்திவேல் முன்னிலை வகித்தனர். விவசாயிகள் கடற்கரையில் இறந்தவர்களுக்கு செய்வது போல் திதி கொடுத்தனர்.

தேர்தல் அறிக்கையில் கூறியவாறு கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியை ஒன்றிய, மாநில அரசு வேடிக்கை பார்க்க கூடாது என்றும் கோஷங்கள் எழுப்பினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

---

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் – முத்தமிழறிஞர்

# கலைஞர் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடிய கழக நிர்வாகிகளுக்குப் பாராட்டு விழா!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை! பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 5-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழகம் சார்பில் இன்று (05.07.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை முத்தமிழ் பேரவை ராஜா அண்ணாமலைபுரத்தில் தமிழின தலைவர்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் மாதம் முழுவதும் புத்தெழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடிய கழக நிர்வாகிகள் பாராட்டு விழாவினை சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு தலைமையில் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, நந்தனம் கி.மதி, கே.ஏழுமலை , கோ.சு.மணி ஆகியோர் முன்னிலையிலும் ஆ.சந்திரசேகர் நந்தனம் வேதா, மு. சத்யா, கே மலர், என்.அன்பழகன் ஆகியோர் வரவேற்பிலும் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகள் வழங்குகிறார்கள்.

இறுதியாக ராஜா அன்பழகன், த.விக்னேஸ்வரன், தினேஷ் மாணிக்கம், எஸ். உமாசங்கர்,சி. பிரகாஷ்,எ. அஸ்வின் குமார் ஆகியோர் நன்றி உரையாற்றுகிறார்கள்.

ஆகவே மயிலை கிழக்கு பகுதியைச் சார்ந்த சார்ந்த மாநில,மாவட்ட,பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளரகள் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2,BDO,BLC நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் முரசொலி முகவருமான

## ஏ.ஜி. வெங்கடாசலத்தின் தாயார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!



ஈரோடு, ஜூலை 5-

ஈரோடு மாவட்டம் அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் முரசொலி முகவருமான ஏ.ஜி. வெங்கடாசலத்தின் தாயார் குப்பாயம்மாள் அவர்கள் நேற்று (4.7.2026) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

